# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - ஐந்து - __________ நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ள கலை __________

 அ) சிலம்பாட்டம் ஆ) ஏறு தழுவுதல் இ) வில்வித்தை ஈ) மற்போர்

2. 'வேகமாக' - இச்சொல்லுக்குரிய பொருள் __________

 அ) மெதுவாக ஆ) விரைவாக இ) கவனமாக ஈ) மெலிதாக

3. 'ஆன்ற' - இச்சொல்லின் பொருள் __________

 அ) உயர்ந்த ஆ) பொலிந்த இ) அணிந்த ஈ) அயர்ந்த

4. எனக்கு நேற்று தேர்வு __________

 அ) நடக்கிறது ஆ) நடந்தது இ) அணிந்த ஈ) நடக்கலாம்

5. 'பேருண்மை' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

 அ) பேர் + உண்மை ஆ) பெரிய + உண்மை
 இ) பேரு + உண்மை ஈ) பெருமை + உண்மை

6. பாடலில் 'நேர்மை' என்னும் பொருள் தரும் சொல் __________

 அ) நயன் ஆ) நன்றி இ) பயன் ஈ) பண்பு

7. __________ எங்குச் சென்றீர்கள்?

 அ) நீ ஆ) நீங்கள் இ) அவர்கள் ஈ) இவர்கள்

8. 'மரப்பலகை' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

 அ) மரப் + பலகை ஆ) மர + பலகை இ) மரம் + பலகை ஈ) மரப்பு + பலகை

9. 'பண்புடைமை' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

 அ) பண் + புடைமை ஆ) பண்பு + உடைமை
 இ) பண்பு + புடைமை ஈ) பண் + உடைமை

10. ஓவியர் ஓவியத்தை __________

 அ) வரைந்தார் ஆ) எழுதினார் இ) வரை ஈ) எழுதி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

11. ரோஜாப்பூவில் __________ என்ற நிறமி உள்ளது.
12. ஆப்பிள் கீழே விழுவது விசை என்று அறிந்தவர் __________
13. ரைட் சகோதரர்கள் __________ ஆம் ஆண்டு விமானத்தில் பறந்தனர்.
14. மின்மினிப் பூச்சியின் உடலில் __________ இருப்பதால், அது மின்னுகிறது.
15. பறவைகளின் இறகுகளிலும், __________ காற்றுப்பைகள் உள்ளன.

III. **பொருத்துக.** 5 × 1 = 5

16. அ) மேகம் - ஒளிரும்
    ஆ) இலை - நீராவி இயந்திரம்
    இ) ஜேம்ஸ் வாட் - நாம்
    ஈ) தன்மைப்பெயர் - கறுத்திருக்கும்
    உ) விண்மீன் - உதிரும்

IV. **மனப்பாடப் பாடல்** 2 + 2 = 4

17. 'வழக்கு' என முடியும் குறளை எழுதுக.
18. 'அரம்போலும்' என தொடங்கும் குறளை எழுதுக.

V. **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

19. ஏறு தழுவுதல் என்றால் என்ன?
20. மனிதனின் சிந்தனையால் எது வளரத் தொடங்கியது?
21. பறக்கும் விமானத்தைக் கண்டறிந்தவர்கள் யார்?
22. மின்னல் ஏன் மின்னுகிறது?
23. தமிழர்களின் வீரக்கலைகளுள் இரண்டைக் குறிப்பிடுக.
24. 'மரம் போன்றவர்' எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?
25. நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
26. பறவைகள் திசைமாறிப் பறப்பதற்கு எது உதவுகிறது?

VI. **கடிதம் எழுதுக.** 1 × 5 = 5

27. பிர்லா கோளரங்கத்தைச் சுற்றிப் பார்க்க அனுமதி வேண்டி விண்ணப்பித்தல்.

VII. **வினாக்களுக்கு ஏற்ப விடையளி.**

28. தமிழில் மொழியாக்கம் தருக. 1 × 5 = 5
    அ) Scientist ஆ) Surprise இ) Effort
    ஈ) Clouds உ) Lightning
29. சொல்லிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக. 6
    அ) பட்டுக்கோட்டை